DVC.No. 22/2022

R.W.1

| | | |
|---|---|---|
| திரு.ராஜேஷ் | த/பெ. செல்வராஜ் | Date: 15.05.2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 on today.

**( Petitioner present, Respondent present)**

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு

**குறுக்கு விசாரணை**

1. நான் தற்போது திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரியில் போஸ்ட்மென் வேலை பார்த்து வருகிறேன். திருமண சமயத்தில் தூத்துக்குடி மாவட்டம் சுண்டங்கோட்டையில் தற்காலிக கிளை அஞ்சலக அதிகாரியாக வேலை பார்த்து வந்தேன். நான் திருமண சமயத்தில் தற்காலிக வேலை பார்ப்பதாக சொல்லிதான் திருமணம் செய்தேன் என்றால் சரிதான். திருமண சமயத்தில் நான் வழக்கில் சொல்லப்பட்டுள்ள இடைச்சிவிளையில் எனது வீட்டில் வசித்து வந்தேன். எங்கள் நிச்சயதார்த்தம் மனுதாரர் வீட்டில் வைத்து நடந்தது. தேதி ஞாபகம் உள்ளதா என்றால் இல்லை. 03.11.2017 என்றால் சரிதான்.

2. என்னிடம் காட்டப்படும் புகைப்படம் எங்கள் நிச்சயதார்த்த நிகழ்வின் போது எடுக்கப்பட்டது என்றால் சாட்சி புகைப்படத்தை வாங்கி பார்த்துவிட்டு போட்டோவில் உள்ளது தான்தான் என்றும் ஆனால் எப்போது எடுக்கப்பட்டது என தனக்கு தெரியாது என சாட்சியம் அளிக்கிறார். மேற்படி புகைப்படம் 4 எண்ணம். அது **ம.சா.ஆ.**7 ஆகும். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் இடது பக்கம் முதலில் உள்ள நபர் எனது அக்கா சபீதா கணவர் என்றால் சரிதான். அதற்கு அடுத்து உள்ளது எனது பெரியப்பா. வலது பக்கம் முதலில் உள்ளது மனுதாரரின் அப்பா என்றால் அவரது சாயலில்தான் உள்ளது.

3. எனது கண்பார்வை நன்றாகத்தான் உள்ளது. நான் மனுதாரர் மீது

விவாகரத்து கேட்டு மனு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். எந்த தேதியில் தாக்கல் செய்தேன் என்றால் 07.03.2019 ஆகும். அந்த வழக்கு தாக்கல் செய்து 5 நாட்கள் கழித்து 12.03.2019 அன்று மனுதாரரை நான் அடித்ததாக என் மீது தட்டார்மடம் காவல் நிலையத்தில் குற்ற எண் 46/2019 என்று வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கில் எனது தாயார், எனது சகோதரியின் கணவரும் எதிரிகளாக இருக்கிறார்கள் என்றால் சரிதான். அந்த வழக்கு தற்போது சாத்தான்குளம் குற்றவியல் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். திருமணத்திற்கு பிறகு நானும் மனுதாரரும் இடைச்சிவிளை வீட்டில்தான் வசித்து வந்தோம் என்றால் சரிதான்.

4. வேறு வீட்டில் வசிக்கவில்லை என்றால் சரிதான். மனுதாரர் பிரியும் வரை இடைச்சிவிளை வீட்டில்தான் வசித்து வந்தோம் என்றால் சரிதான். 12.03.2019 சம்பவத்திற்கு மனுதாரர் மயங்கி விட்டதால் மனுதாரரை எனது பக்கத்து வீட்டை சார்ந்தவர் வாடகை காரில் மனுதாரர் பெற்றோர் வீட்டிற்கு சென்றுவிட்டார் என்றால் அப்படிதான் வழக்கில் சொல்லியுள்ளார்கள் என சாட்சியம் அளித்தார். பின்னர் சாட்சி தானாக தாங்கள் இரவில் வீட்டில் துாங்கிக்கொண்டிருந்தோம் என்றும் மனுதாரர் உண்மைக்கு புறம்பாக புகார் கொடுத்துள்ளார் என்றும் சாட்சியம் அளித்தார். அன்றைய தினம் எனது வீட்டில் நானும், அம்மா, எனது தங்கை ராதா, அவரது கணவர் லிங்கம் ஆகியோர் இருந்தோம்.

5. எனது நிச்சயதார்த்ததின் போது ரூ. 3 லட்சம் ரொக்கம் கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. எனது குடும்பத்தார் வற்புறுத்தல் பேரில் 50 பவுன் தங்க நகை போட்டார்கள் என்றால் சரியல்ல. திருமணம் முடிந்து சுமார் 1 வருடம் கழித்து எனக்கு நிரந்தர பணி கிடைத்தது. நான் பணி நிரந்தரம் கிடைத்ததால் கூடுதல் வரதட்சணை கேட்டு மனுதாரரை

கொடுமைப்படுத்தினேன் என்றால் சரியல்ல. எனக்கு பணி நிரந்தரம் கிடைத்தால் கூடுதல் வரதட்சனை கொடுத்து திருமணம் செய்ய வேறு பெண்கள் தயாராக இருப்பதாகவும் அதனால் மனுதாரரை விவாகரத்து கொடுக்க சொல்லி கொடுமைப்படுத்தினேன் என்றால் சரியல்ல. மனுதாரரால் கூடுதல் வரதட்சனை கொடுக்க முடியவில்லை என்பதால் எப்படியாவது விவாகரத்து பெறவேண்டும் என்பதற்காக பொய்யான காரணங்களை கூறி 07.03.2019 தேதியில் விவாகரத்து வழக்கினை தாக்கல் செய்துவிட்டு பின்னர் 12.03.2019 தேதியில் மனுதாரரை அடித்து காயம் ஏற்படுத்தி அவர் பெற்றோர் வீட்டிற்கு அனுப்பி வைத்தேன் என்றால் சரியல்ல.

6. நான் விவாகரத்து வழக்கை முதலில் திருச்செந்தூர் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன். விவாகரத்து வழக்கு தாக்கல் செய்த தேதியில் நானும் மனுதாரரும் ஒரே வீட்டில்தான் வசித்து வந்தோம் என்றால் சரியல்ல. ஒரே வீட்டில் வசித்து வந்ததால்தான் 12.03.2019 அன்று மனுதாரரை அடித்து விரட்டினேன் என்றால் சரியல்ல. 12.03.2019 க்கு முன்பாக 23.02.2019 தேதியில் நானும் எனது குடும்பத்தினரும் மனுதாரரை அடித்து கூடுதல் வரதட்சனை கேட்டோம் என்றால் சரியல்ல. இது சம்பந்தமாக தட்டார்மடம் காவல் நிலையத்தில் விசாரணை நடைபெற்றது என்றால் சரியல்ல. வரதட்சனை தொடர்பாக நடைபெறவில்லை. 23.02.2019 தேதியில் தட்டார்மடம் காவல் நிலையத்திற்கு நானும், திருச்செந்தூரை சேர்ந்த ஒரு இளம் வழக்கறிஞரும் சென்றோம். எனது அத்தான் காண்டீபன் உடன் வந்தார்.

7. காண்டீபன் என்பது அவரை அழைக்கும் பெயர். ஆனால் ஆவணப்படி அவரது பெயர் நாகமணி மார்த்தாண்டன். அந்த புகார் மனுவில் நான் இனிமேல் அடிக்கமாட்டேன் என்றும், நல்லமுறையில்

பார்த்துக்கொள்வதாக சமரசமாக முடிக்கப்பட்டது என்றால் போலிசார் அவ்வாறு மிரட்டி எழுத சொன்னார்கள். என்னுடன் வழக்கறிஞர் வந்ததால் அவ்வாறு மிரட்டுவதற்கு வாய்ப்பு இல்லை என்றாலும், நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. 23.02.2019 நான் அடித்ததில் கருவுற்றிருந்த மனுதாரருக்கு கரு கலைந்தது என்றால் சரியல்ல. மனுதாரர் என்னுடன் சேர்ந்து வாழ வேண்டும் என விரும்பியதால்தான் அதன் மீது மேல் நடவடிக்கை எடுக்காமல் மனுவை முடித்துக்கொண்டார் என்றால் சரியல்ல. அந்த விசாரணைக்கு பிறகு மனுதாரரை கூப்பிட்டு எனது வீட்டிற்குதான் சென்றேன் என்றால் சரியல்ல. நான் எனது வீட்டிற்கு சென்றேன். மனுதாரர் அவர் பெற்றோர் வீட்டிற்கு சென்றார். பின்னர் மார்ச் 8ம் தேதிக்கு பிறகு வந்தார்.

8. மனு விசாரணைக்கு பிறகு நேராக எனது வீட்டிற்குதான் மனுதாரர் வந்தார் என்றாலும், அன்று இரவே எனது சகோதரியும் அவரது கணவரும் சேர்ந்து எப்படி காவல் நியைலத்தில் புகார் கொடுக்கலாம் என தரக்குறைவாக பேசி கொடுமைச் செய்தார்கள் என்றாலும், அதை மறைப்பதற்காகத்தான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த விவகாரத்து மனு பின்னர் வள்ளியூர் சார்பு நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டது என்றால் சரிதான். அந்த வழக்கை ஆறு மாதத்திற்குள் முடிக்கவேண்டும் என உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து உத்தரவு பெற்றேன் என்றால் சரிதான். அதன்படி விவாகரத்து மனு ஆறு மாதத்திற்குள் முழு விசாரணைக்கு பிறகு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான்.

9. நான் மனுதாரரை விவாகரத்து செய்துவிட்டு கூடுதல் வரதட்சனையுடன் வேறு திருமணம் செய்ய முயன்றேன் என்பதால்தான்

விவாகரத்து வழக்கை துரிதப்படுத்தினேன் என்றால் சரியல்ல. விவாகரத்து வழக்கில் சமரசப் பேச்சுவார்த்தையில் நான் கலந்து கொள்ளவில்லை என்றால் சரியல்ல. கலந்து கொண்டேன். ஆனால் சமாதான முடிவு ஏற்படவில்லை. மனுதாரர் மேற்படி சமரசத்தின் போது சேர்ந்து வாழ கோரிய போது நான் மறுத்தேன் என்றால் சரிதான். அதன் பின்னர் விவாகரத்து வழக்கில் திருநெல்வேலியில் மேல்முறையீடு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அப்போதும் சேர்ந்து வாழ பேச்சுவார்த்தை நடந்தது என்றால் சரிதான். ஆனால் உடன்பாடு ஏற்படவில்லை. மனுதாரர் மேற்படி சமரசத்தின் போது சேர்ந்து வாழ திரும்பவும் கோரிய போது நான் மறுத்தேன் என்றால் சரிதான்.இந்த வழக்கு தாக்கல் செய்த பின்னர் மாத ஜீவனாம்சம் மற்றும் குடியிருக்க வசதி ஏற்படுத்தி கொடுக்க உத்தரவு இடப்பட்டது என்றால் சரிதான். அதன்படி மாத ஜீவனாம்சம் தொகை மட்டும் கொடுக்கிறேன் என்றாலும், குடியிருக்க வசதி ஏற்படுத்தி கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

10. நான் தாக்கல் செய்த விவாகரத்து வழக்கின் மேல்முறையீடும் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். தற்போது மதுரை உயர்நீதிமன்றத்தில் 2ம் மேல் முறையீடு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். நான் மறுமணம் எதுவும் செய்து கொள்ளவில்லை. வேறு ஒருவருடனும் சேர்ந்து வாழவில்லை. தற்போது தனியாகத்தான் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். நான் ஆரம்பம் முதல் கூடுதல் வரதட்சனைக்காக மனுதாரரை உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் கொடுமை செய்தேன் என்றாலும் சரியல்ல. வழக்கு நடவடிக்கைகளை எதிர் கொள்வதற்கு நான் ஆரம்பம் முதலே தயாராகத்தான் இருந்து வருகிறேன் என்றால் பொய்யான வழக்கு என்பதால் எதிர் வழக்காடு செய்து வருகிறேன்.

11. எங்கள் குடும்ப சொத்துக்களை பொறுத்து எனது உடன் பிறந்த சகோதரி சபீதா என்பவருக்கு நான் பாக விடுதலை எழுதிக் கொடுத்ததாக எதிர் வழக்குரையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். அவரது கணவர்தான் என்னுடன் காவல் நிலையம் வந்த நாகமணி மார்த்தாண்டன் என்றால் சரிதான். எனது சகோதரி சபீதாவும், நாகமணி மார்த்தாண்டன் தொடர்ந்து கேரளாவில்தான் வசித்து வருகிறார் என்றால் சரிதான். அவர் எங்கள் ஊருக்கு எப்போதாவதுதான் வருவார் என்றால் சரியல்ல. அடிக்கடி வந்து செல்வார்கள். அவர்கள் குழந்தைகள் கேரளாவில்தான் படித்து வருகிறார்கள் என்றால் சரிதான். நான் சுண்டங்கோட்டையில் வேலை பார்த்தபோது இடைச்சிவிளையில் இருந்துதான் சென்று வந்தேன் என்றால் சரிதான். பாக விடுதலை ஆவணம் 2019 ம் ஆண்டு மே மாதம் எழுதி கொடுத்தேன். தேதி ஞாபகமில்லை. மேற்படி ஆவணம் நான் விவாகரத்து வழக்கு தாக்கல் செய்த பிறகுதான் எழுதி கொடுத்தேன் என்றால் சரிதான்.

12. பாக விடுதலை ஆவணத்திற்கு முன்பாக மனுதாரர் என் மீது கொடுத்த வழக்கு 12.03.2019 தேதிய குற்ற வழக்கு என்றால் சரிதான். அந்த பாக விடுதலை ஆவணத்தில் எங்கள் வீடு, இடம் ஆகியவை கொடுத்தேன். மேற்படி ஆவணத்தில் வீடு, சொத்து, சுமார் 6 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட தோட்டம் ஆகியவற்றை பொறுத்து எழுதி கொடுத்துள்ளேன் என்றால் 6 ஏக்கர் இல்லை. எனது பாகத்தை மட்டும் கொடுத்தேன். அந்த வீட்டில் தற்போது எனது அம்மா வசித்து வருகிறார். நான் பிச்சிகுடியிருப்பில் வசித்ததாக எ.ம.சா.ஆ.8 ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் வழக்கிற்காக பொய்யாக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் மனுதாரருக்கு ஜீவனாம்சம் கொடுப்பதில் இருந்து தப்பிக்க வேண்டி பாக விடுதலை

ஏற்படுத்தி கொடுத்துள்ளேன் என்றாலும் அதனால்தான் வாடகை ஒப்பந்தம் தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

13. என்னிடம் காட்டப்படும் ஆவணமான **எ.ம.சா.ஆ.9** எனது போஸ்டாபீஸ் வங்கி கணக்கு விபரமாகும். மேற்படி ஆவணத்தில் 31.10.2022 தேதியில் எனது சம்பளமாக ரூ.16,398/- வரவு வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது தற்போதைய சம்பள சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தற்போது ரூ.33,500/- வருகிறது. பாக விடுதலை எழுதிக்கொடுத்த பிறகு எனது அம்மாவுடன் சேர்ந்து அந்த வீட்டில் வசிப்பதற்கு எனக்கு தடை இல்லை என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக ஆவணங்களை தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் மனுதாரரிடம் விவாகரத்து பெறுவதற்காகவும், அவருக்கு ஜீவனாம்சம் கொடுக்காமல் தப்பிக்க வேண்டி ஆரம்பம் முதல் உள்நோக்கத்துடன் நடந்து கொண்டேன் என்று எனது செயல்பாடுகள் மூலம் தெரிய வருகிறது என்றால் சரியல்ல.

14. 12.03.2019 தேதியில் நானும் எனது குடும்பத்தாறும் சேர்ந்து மனுதாரரை அடித்து அவர் மயக்கமாகி பக்கத்து வீட்டில் உள்ளவர்கள் துணையுடன் போட்டிருந்த உடையுடன் தனது பெற்றோர் வீட்டிற்கு சென்றுவிட்டார் என்றாலும் அந்த சமயத்தில் மனுதாரருக்கு சொந்தமான அனைத்து பொருட்களும், உடைகள், சுமார் 25 பவுன் தங்க நகைகள், திருமண சமயத்தில் கொடுக்கப்பட்ட சுமார் 3 லட்சம் மதிப்புள்ள சீர் பொருட்கள் அனைத்தும் எங்கள் வீட்டில் எங்கள் வசம்தான் இருந்தது என்றால் அதை அபகரிப்பதற்காக பொய்யாக நாடகமாடி ஆவணங்களை உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தற்போதும் இடைச்சிவிளை வீட்டில் மனுதாரருக்கு கொடுக்கப்பட்ட சீதனப் பொருட்கள் உள்ளது என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றால்

சரியல்ல. மனுதாரருக்கு கொடுக்கப்பட்ட சுமார் 25 பவுன் தங்க நகை தற்போது வரை எனது வசம்தான் உள்ளது என்றாலும் அதை கொடுக்காமல் அலைக்கழித்து வருகிறேன் என்றாலும் சரியல்ல. மனுதாரர் எத்தனை வழக்குகள் போட்டாலும் நான் அந்த நகைகளை வைத்த எதிர் வழக்காடி வருவேன் என ஊரில் சொல்லி வருகிறேன் என்றால் சரியல்ல. நான் விருப்பப்பட்டுதான் சென்னைக்கு பணி மாறுதலில் சென்றேன் என்றால் சரிதான். பதவி உயர்வில் சென்றேன். தற்போது கேரளாவிற்கு பணி மாறுதல் கோரி வருகிறேன் என்றால் சரியல்ல. எனது குடும்பத்தார் தூண்டுதல் பேரில் இவ்வாறு நடந்து கொள்கிறேன் என்றாலும், மனுதாரரிடம் வாழ மறுப்பதற்கு என்னிடம் எந்த விதமான நியாயமான காரணம் இல்லை என்றால் சரியல்ல. எனக்கு கடன் இருப்பதாக எதிர் உரையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த கடன் தற்போதும் உள்ளது.

15. அதன் மாத தவணை தொகை ரூ.5,980/- என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பாக விடுதலை கொடுத்த சொத்தில் எனது தாயாருக்கும் ஒரு பங்கு உள்ளது என்றால் சரிதான். அந்த சொத்தில் வரும் வருமானத்தில் எனது தாயார் அவரை பராமரித்து வருவதால் அவரை நான் பராமரித்து வரவில்லை என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக தாயாரை பராமரித்து வருவதாக சொல்லியுள்னே் என்றால் சரியல்ல. நான் பாக விடுதலை கொடுத்ததாக சொல்லும் சொத்தை தற்போது நான்தான் அனுபவித்து வருகிறேன் என்றால் சரியல்ல. எனது தாயாரும் மனுதாரரும் கொடுமை செய்ததால் அவரும் இந்த வழக்கிற்கு தேவையான நபர் என்றால் சரியல்ல. மனுதாரரை தகுதியான நல்லமுறையில் வாழ வைக்க உறைவிட வசதியை ஏற்படுத்தி கொடுக்க நான் கடமைப்பட்டவர் என்றால் சரிதான். மனுதாரரின் 25 பவுன்

நகைகளையும், ரூ.3 லட்சம் பெருமான சீதனப் பொருட்களை திருப்பி கொடுக்க நான் கடமைப்பட்டவர் என்றாலும் சரியல்ல. நான் மத்திய அரசு பணியில் இருந்து நல்ல சம்பளம் பெற்று வருவதால் மனுதாரருக்கு மாதம் ரூ.25,000/- ஜீவனாம்சம் கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. நான் மனுதாரருக்கு ஏற்படுத்திய குடும்ப வன்முறைக்கு ரூ. 20 லட்சம் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல.

16. நான் எதிர் உரையிலும், எனது முதல் விசாரணையிலும் வழக்கிற்காக பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. மனுதாரரின் மனு அனுமதிக்கத்தக்கது என்றால் சரியல்ல.

Taken down me in open court in the presence of the accused read over to the deponent and admitted by him/her to be correct.

MOSES JEBASINGH

Digitally signed by MOSES JEBASINGH
Date: 2026.05.15 14:34:49 +0530

Judicial Magistrate,
Valliyoor.